# தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் 10

வாரம் 36

**அலகு : குகப்படலம்**

## இவ்வாரத்துள் பெற்றுக்கொள்ளக் கூடிய கற்றற்பேறுகள் :

- பாடல்களைச் சந்தி பிரித்து, கொண்டுகூட்டி வாசிப்பார்.
- பாடல்களின் பொருளைத் தமது சொந்த மொழி நடையில் எழுதுவார்.
- பாடல்களில் இடம்பெறும் அணிகள் பற்றி விளக்கி எழுதுவார்.
- அரும்பதங்களின் பொருளை அறிந்து கூறுவார்.
- பாடல்களில் நயந்தவற்றை எழுதுவார்.

## மாணவர் செய்ய வேண்டிய செயற்பாடுகள் :

I. தமிழ் இலக்கியத் தொகுப்புப் பாடநூலின் பக்கம் 43 இலுள்ள பாடல் 7 இனைச் சந்தி பிரித்து வாசிக்கவும்.

II. பின்வரும் அரும்பதங்களுக்கான பொருள்களை அறிந்து கொள்க.

* படர் – துன்பம் * செவிலி – வளர்ப்புத்தாய் * பாழ்த்த – பாழடைந்த

* குடர் – குடல் (வயிறு) * உடர் – உடல் * இடர் – துன்பம்

- **விசேட விடயம்:** பரதன் தனது மனத்துயர் முழுவதையும் குகனிடம் வெளிப்படுத்துவதாக இப்பாடல் அமைகிறது.

III. பாடப்புத்தகத்தைத் துணையாகக் கொண்டு பாடல் 7 இன் பொருளை அறிந்து கொள்க.

IV. தமிழ் இலக்கியத் தொகுப்புப் பாடநூலின் பக்கம் 43 இலுள்ள பாடல் 8 இனைச் சந்தி பிரித்து வாசிக்கவும்.

- அரும்பதங்கள்

* நல்கை – நல்ல கை * பேடை – பெண் அன்னம் * துன்னிற்று – அடைந்தது

* சிறை – சிறகு

- அணி : உவமை அணி

  அன்னப் பேடை சிறை இலது ஆய்க்கரை துன்னிற்று என்னவும் வந்தது தோணியே

  - உவமானம் : சிறகிழந்த அன்னப் பேடை
  - உவமேயம் : தோணி
  - பொதுத் தன்மை : தோற்றமும் அசைந்து செல்லும் அழகும்
  - உவமை உருபு : என்ன

V. பாடப்புத்தகத்தைத் துணையாகக் கொண்டு பாடல் 8 இன் பொருளை அறிந்துகொள்க.

V. மேலதிக விளக்கங்களுக்காக கீழே தரப்பட்டுள்ள இணையத்தள இணைப்புக்களைப் பயன்படுத்திக் கொள்க.

VI. பாட நூலின் பயிற்சி வினாக்களுள் 3 ஆவது வினாவுக்கு விடை எழுதுக.

VII. இச்செயலட்டையின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள கணிப்பீட்டு வினாக்களுக்கு விடையளிக்க.

VIII. அனைத்து வினாக்களுக்குமான விடைகளை உங்கள் பாட ஆசிரியரிடம் வழங்கி சரிபார்த்துக் கொள்க.

**மேற்படி செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய புத்தகங்கள், Website, LMS பாடம் கற்றல் உபகரணங்கள் :**

**ethaksalawa :**

**Youtube :**

**https://www.youtube.com/watch?app=desktop&v=zSLnYVlak0s**

**கணிப்பீடு :**

1. **பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**
   1. "படர் எலாம் படைத்தாளை…" - படைத்தல் என்பதன் எதிர்ப்பதம்
      1. அருளல் 2. காத்தல் 3. உருவாக்குதல் 4. அழித்தல்
   3. "உயர் இலா எதை தோன்றும் உலகத்தே" - இது
      1. பொருளாகு பெயர் 2. காலவாகுபெயர் 3. சினையாகுபெயர்
      4. இடவாகுபெயர்
   4. பயந்த பெரியாள், அளந்த உலகு என்ப
      1. பெயரெச்சம் 2. வினையெச்சம் 3. முற்று 4. பெயரெச்சத்தொடர்
   5. கரணை ஆர்கலி என்பதில் இடம்பெற்றுள்ள அணி
      1. உவமை 2. உருவகம் 3. தற்குறிப்பேற்றம் 4. தன்மை நவிற்சி

2. **பின்வரும் கட்டமைப்பு வினாக்களுக்கு விடையளிக்க.**
   1. கங்கைகாண் படலத்தில் கைகேயியின் கொடுமை குணம் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.
   2. பரதன் கைகேயி மீது கொண்ட வெறுப்பு புலப்படுமாற்றினை விளக்குக.
   3. பின்வரும் பாத்திரங்களின் குணவியல்புகளை எழுதுக.
      I. குகன் II. பரதன் III. கோசலை IV. சுமித்திரை V. கைகேயி VI. இராமன்